செய்தி வெளியீடு எண் : 2047 நாள் : 11.10.2023

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகளை மேம்படுத்திட ஏதுவாக காலிப்பணியிடங்களை நிரப்புதல், கருணை அடிப்படையிலான வாரிசுதாரர்களை பணி நியமனம் செய்தல், ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கான பணப்பலன்களை வழங்குதல் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்துதல் தொடர்பாக நடவடிக்கைகள் எடுத்திட வேண்டும் – மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் தகவல்**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு.சா.சி.சிவசங்கர் அவர்கள் தலைமையில், 10.10.2023 அன்று, தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் செயல்பாடுகள் குறித்து, போக்குவரத்துத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.க.பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை சிறப்புச் செயலாளர் திரு.தி.ந.வெங்கடேஷ், இ.ஆ.ப., அனைத்துப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர்கள், பல்லவன் போக்குவரத்து அறிவுரைப் பணிக்குழு (PTCS) மேலாண் இயக்குநர், சாலை போக்குவரத்து நிறுவன இயக்குநர் மற்றும் போக்குவரத்துத்துறை தலைவர் அலுவலக உயர் அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்கள்.

இவ்வாலோசனைக் கூட்டத்தில், மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள், பொதுமக்களுக்கு பேருந்து சேவையினை நிறைவாக அளிப்பதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் பெரும்பங்காற்றி வருகின்றன. குறிப்பாக, இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் குறைந்த பயண கட்டணத்தில் பேருந்து சேவையினை வழங்கி வருகிறது. கொரோனா பெருந்தொற்று தாக்கத்தினால் ஏற்பட்ட நிதி நெருக்கடி தொடர்ந்த போதிலும், போக்குவரத்து சேவையினை சிறப்பாக செய்தும், பயண கட்டணத்தை உயர்த்தாமலும் சிறந்த முறையில் செயலாற்றி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்திரவின்படி, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களின் பேருந்து சேவைகளை மேம்படுத்திட ஏதுவாக, 1,619 காலிப்பணியிடங்களை நிரப்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு, முதல் கட்டமாக அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தில் உள்ள 685 ஓட்டுனருடன் நடத்துநர் காலிப்பணியிடங்களை நிரப்ப எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்து விரைவுபடுத்த அறிவுறுத்தினார்கள்.

கருணை அடிப்படையிலான பணி நியமனங்களின் நிலை குறித்து கலந்தாலோசிக்கப்பட்டது. தற்போது, அனைத்து போக்குவரத்துக் கழகங்களிலும், இறந்த பணியாளர்களின் வாரிசுகள் ஓட்டுநர், நடத்துநர் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் இப்பிரிவில், நியமனத்தை துரிதப்படுத்த வேண்டும் என தெரிவித்தார்கள்.

மேலும், வாகனங்களைச் சிறப்பாகப் பராமரிப்பதற்கும், அவற்றின் செயல்திறனை அதிகப்படுத்துவதற்கு ஊக்கப்படுத்த, தற்போது வழங்கப்பட்டு வரும் பராமரிப்பு ஊக்கத் தொகை / சிறப்பு ஊக்கத்தொகையை உயர்த்துவது தொடர்பாக ஆராயுமாறு அறிவுறுத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து, கடந்த டிசம்பர்–2022 முதல் ஆகஸ்ட்–2023 வரை, தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்களில் பணியாற்றி ஓய்வு, விருப்ப ஓய்வு பெற்ற மற்றும் இறந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய பணப்பலன்களுக்கான நிலுவைத் தொகையை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

மேலும், ஓய்வூதியர்களுக்கு அகவிலைப்படி உயர்த்துதல் மற்றும் மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை அமல்படுத்தல் தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டது. இதில், மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக, காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து, காப்பீட்டு தொகை குறித்து விவரம் கோரப்பட்டு, இக்காப்பீடு தொடர்பாக ஓய்வூதியர்களிடம் விருப்புரிமை படிவம் பெற்றும், தொழிற்சங்கத்தினரிடம் கலந்தாலோசித்தும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என அறிவுறுத்தினார்கள்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**(போக்குவரத்துத்துறை)**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in